(அ) திருச்சி, தஞ்சை மாவட்ட எல்லையில் இருக்கும் கரம்பக்குடிக்கு அருகில் உள்ள அக்கினி ஆற்றில் அணை கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(இ) அதற்கு வேண்டிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு விட்டனவா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) The scheme is under investigation. Plans and estimate will be prepared after the investigation is completed.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தால் எத்தனை ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 4,207 ஏக்கருக்கு இதனால் நன்மை ஏற்படலாம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தால் அதிகப்படியான நிலங்கள் சேதம் அடைகின்றன என்று எந்த அரசியல் கட்சியாவது மாநாடு நடத்தி தீர்மானம் அனுப்பி அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : குறிப்பாகச் சொல்ல முடியாது. பொதுவாக இந்தத் தண்ணீர் திட்டங்களெல்லாம் வேண்டுமென்று சொல்லுவதற்கு மாநாடு நடத்துவது நம் நாட்டின் பழக்கம்.

நீர்ப்பாசன வசதிகள் (விருத்தாசலம் தாலுகா)

*452 கேள்வி—**திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தாலுகாவிலே "சின்னத்துவாரி" ஓடையில் ஒரு அணை கட்ட உத்தேசமுண்டா ?

(இ) விருத்தாசலம் தாலுகா பெண்ணாடம் பிர்க்கா கோனூரில் உள்ள பழைய நீர்ப்பாசன ஏரியை மறுபடியும் புதுப் பிக்க உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) சின்னத்துவாரி ஓடையில் 6/6 மைலில் ஒரு மட்டம் சுவரும் இடது கரையில் அதையொட்டி ஒரு தலைமடையும் கட்டப்பட்டுள்ளன. அந்த தலைமடையிலிருந்து கோனூர் ஏரிக்குத் தண்ணீர் கொண்டு போக 2,500 அடி நீளமுள்ள ஒரு கால்வாயும் வெட்டப்பட்டுள்ளது.

(இ) ஏரி 1949-50-ல் புதுப்பிக்கப்பட்டது.

திரு. கி. நாராயணசாமி பிள்ளை : தலைவர் அவர்களே, இதற்காக எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

[31st March 1964

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது முடிந்து போய் விட்டது. எவ்வளவு தொகை என்ற கணக்கு என்னிடத்தில் இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தின் போது ஒவ்வொரு அங்கத்தினரும் அந்தந்த ஊரில் எந்தெந்த ஆற்றில் அணைக்கட்டு கட்ட உத்தேசம் உண்டா என்று கேட்பதைக் காட்டிலும், பொதுவாக தமிழகத்தில் ஒரு சர்வே செய்து, எந்த ஆறுகளில் அணைக்கட்டுகள் கட்டுவது, அவைகளில் எவைகள் கட்டி முடிந்துவிட்டன, எவைகள் கட்டாமல் பாக்கி இருக்கின்றன என்ற விளக்கத்தை அமைச்சர் அவர்கள் சொல்லலாம் அல்லவா?

MR. SPEAKER : The hon. Member must put a question and not go on offering remarks.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது மாத்திரமல்ல. அப்படிச் செய்தால் அங்கத்தினர்களுக்கெல்லாம் வேலை இல்லாமல் போய்விடுமே என்று எனக்குக் கொஞ்சம் கவலை. (சிரிப்பு).

கிராம அதிகாரிகள்

*460 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கிராம அதிகாரிகள் சங்கத்தார் சர்க்காருக்கு கோரிக்கைகள் ஏதேனும் சமீபத்தில் முதல் அமைச்சரிடம் கொடுத்தனரா ?

(இ) ஆமெனில், என்னென்ன கோரிக்கைகள் ?

(உ) அவைகள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட இருக் கின்றன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) (உ) பதில்[a] சபையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. து. ப. அழகமுத்து : சபை முன்பு வைக்கப்பட்டுள்ள பதிலில் கிராம அதிகாரிகள் ஏறத்தாழ 15 கோரிக்கைகளை சர்க்காரிடம் கேட்டிருக்கிறார்கள். இதில் பல கோரிக்கைகள் அவர்கள் நீண்ட நாட்களாக கேட்டுக்கொண்டு வருபவை ஆகும். இது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என்று சொன்னால், எப்பொழுது இந்த பரிசீலனை முடிவு பெறும்? கிராம அதிகாரி களுடைய கோரிக்கைகள் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

---

a849–851-ம் பக்கங்களில் மூன்றாவது இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.